புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

No.4/TD/DTC/PA/2013/21 புதுச்சேரி, தேதி: 04.01.2014

**செய்திக் குறிப்பு**

நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பெருகி வரும் வாகனவிபத்தின் மூலம் ஏற்படும் உயிரழப்பு, ஊனம் ஏற்படுதல், வாகனம் சேதம் ஆகியவற்றை குறைப்பதற்காக அனைத்து தரப்பினரிடமும் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சாலை பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 11.01.2014 முதல் 17.01.2014 வரை 25வது சாலைப் பாதுகாப்பு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பகுதியிலும் வாகன ஓட்டுனர்களுக்கும், மாணவ மாணவியர்க்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான பயனுள்ள கருத்துக்களும், வழி முறைகளும் சென்றடையும் வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறையும், போக்குவரத்துக் காவல் துறையும் இணைந்து செயல்பட இருக்கின்றன.

சாலைப் பாதுகாப்பு வார நிகழ்ச்சிகளின் அங்கமாக, வாகன ஓட்டுனர்களுக்கு கண் பரிசோதனை முகாம்கள் மற்றும் செவி பரிசோதனை முகாம்கள் நடைபெற உள்ளன. பொது மக்களுக்கு சாலைப் போக்குவரத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சாலைப் பாதுகாப்பு கையேடுகள் வெளியிடப்பட உள்ளன. சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் நடைப்பயணம், பள்ளி மாணவ மாணவிகளுக்கான ஓவியப் போட்டி பொதுமக்களிடமிருந்து சாலை பாதுகாப்பு சுலோகங்கள் (Slogans) எழுதி அனுப்பும் போட்டி போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

..2/-

சாலைப் பாதுகாப்பு வார நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவியருக்கான ஓவியம் வரைந்து அனுப்பும் போட்டியின் தலைப்பு மற்றும் விவரம் வருமாறு:

| வரிசை எண் | வகுப்பு | ஓவியம் வரைய வேண்டிய தலைப்பு | காகித அளவு |
|---|---|---|---|
| 1. | 1 முதல் 5ம் வகுப்பு | பள்ளிக்குச் செல்லும் வாகனம் | A4 |
| 2. | 6 முதல் 8ம் வகுப்பு | பாதுகாப்புடன் சாலையைக் கடப்போம் | 14" x 22" |
| 3. | 9 மற்றும் 10ம் வகுப்பு | சாலை விதிகளை மதிப்போம் | 14" x 22" |
| 4. | 11 மற்றும் 12ம் வகுப்பு | பாதுகாப்பான இரு சக்கர வாகனப் பயணம் | 14" x 22" |

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர் தாம் வரைந்த ஓவியத்துடன் தமது வகுப்பு ஆசிரியர் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியரின் அறிமுகக் கடிதத்தினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அனைத்து தரப்பு மக்களிடமிருந்தும் "சாலை பாதுகாப்பு" என்ற தலைப்பில் இரு வரிக்கு மிகாமல் சுலோகங்கள் வரவேற்கப்படுகின்றன. சுலோகம் எழுதி அனுப்புபவர் தாம் எழுதிய சுலோகத்துடன் தமது பெயர் மற்றும் தொலைப்பேசி/கைப்பேசி எண் மற்றும் முகவரியினையும் எழுதி அனுப்ப வேண்டும்.

வல்லுநர் குழுவால் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கும் சுலோகங்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். ஓவியங்கள் மற்றும் சுலோகங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 13.01.2014. ஓவியங்கள் மற்றும் சுலோகங்கள் நேரடியாகவோ, தபால் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி: போக்குவரத்து ஆணையர், போக்குவரத்துத் துறை, 100அடி சாலை, முதலியார்பேட்டை, புதுச்சேரி - 605 004.

GOVT. OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்